அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 04/2021

எனது இலக்கம் : EST-4/04/MNT/4604
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.03.19

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அகமச்சுக்களின் பசயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## மொழிபெயர்ப்பாளர் குழாத்தை நிறுவுதல்

அரச சேவையில் நிலவுகின்ற தேர்ச்சி பெற்ற மொழிபெயர்ப்பாளர்களின் கடுமையான பற்றாக்குறையை கருத்திற் கொண்டு 2019.01.14 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மொழிபெயர்ப்பாளர் சேவையின் புதிய சேவைப் பிரமாணத்தை அங்கீகரித்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் வரை அரச பல்கலைக்கழகங்களில் மொழிபெயர்ப்பு முறை/ மொழியியலைக் கற்றுள்ள பட்டதாரிகளை, மொழிபெயர்ப்பாளர் சேவையில் தகுதியான பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

02. தற்சமயம் மொழிபெயர்ப்பாளர் சேவையின் நிரந்தர உத்தியோகத்தர்களின் சேவைகளைப் பெறுவதற்கு கடினமாக உள்ள சந்தர்ப்பங்களிலும், மொழிபெயர்ப்பாளர் சேவையில் வெற்றிடமாக உள்ள சந்தர்ப்பங்களிலும் மாத்திரமே இம்முறையைப் பின்பற்றி கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவசியப்படும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதோடு, அதில் தற்போது தேவைப்பாடாகவுள்ள சிங்கள/ தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

03. நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்கள் காணப்படுவதில்லை எனின், தேவைப்பாட்டின் அடிப்படையில் மொழிபெயர்ப்பாளர் சேவையில் புதிய பதவிகளை ஏற்படுத்த முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமைர்த்துவதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத் தலைவர்களினால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

04. இம்மொழிபெயர்ப்பாளர் குழாத்தில் உள்ள நபர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய கட்டண அளவுகள் தொடர்பாக பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

I. தினசரிச் சேவையைப் பெற்றுக்கொள்வதாயின் 08 மணித்தியாள சேவைக் காலத்திற்கு ரூபா. 1000/-ம் (ஆயிரம் ரூபா) செலுத்தல்.

II. ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதாயின் மாதாந்தம் ரூபா.30,000/-ம் (முப்பதாயிரம் ரூபா) செலுத்தல்.

III. மொழிபெயர்ப்பிற்கான கணனித் தட்டச்சுப் பிரதியிடல்/ கணனி அச்சிடலுக்கான, 2016.08.22 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2003(III) இன் 04 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் செலுத்தல்.

05. இம்முறைமையின் கீழ் மொழிபெயர்ப்பாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனத் தலைவர்கள் அவர்களின் சேவைத் தரம் குறித்து காலாண்டு அறிக்கையை அரச சேவை விடயத்துக்குப் பொறுப்பான செயலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு